1984 மார்ச் 16]

பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தும் திட்டம்

*341(வினா எண். 13585)திரு து. இராசரத்தினம் :மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றிய பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாமல் இருந்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், புதிதாக ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

(இ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

(ஈ) எந்த இடத்தில் ஆரம்பிக்க உத்தேசம்?

மாண்புமிகு டாக்டர் எச், வி. ஹண்டே : (அ.) ஆவடியில் ஏற்கெனவே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. (ஆ), (இ), மற்றும்(ஈ) இக்கேள்விக்கு இடமில்லை.

சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையை விரிவுப்படுத்தும் திட்டம்.

*342 வினா எண் 19438 திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை

(ஆ) இவ் வினா எழ இடமில்லை.

திரு. பி. துரைராஜ்: துணைத் தலைவரவர்களே, சங்கரன் கோவில் வட்டாரம் மிகவும் பிற்பட்ட மக்கள்' ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் நிறைய வாழும் பகுதியாகும். எனவே அங்கே இருக்கிற அரசு மருத்துவமனையில் ஹோமியோ பதி மருத்துவப்பிரிவு ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே துணைத் தலைவரவர் ளே' அதுபற்றி தற்போது எந்தவிதமான குறிப்பும் இல்லை.